சார்பு நீதிமன்றம், பல்லடம்.

MCOP.No 188/2022 and MCOP.No. 190/2022

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி : RW1

பெயர் மற்றும் வயது : நவீன்

தந்தை பெயர் : முருகன்

தொழில் :

கிராமம் :

தாலுகா : பல்லடம்

மாவட்டம் : திருப்பூர் மாவட்டம்.

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15 ஆம் நாள் புதன்கிழமை திரு.க.யுவராஜ்,பி.ஏ.,பி.எல்., சார்பு மற்றும் உதவி அமர்வு நீதிபதி, பல்லடம் அவர்களின் முன்னிலையில் சாட்சிக்கு இந்நீதிமன்ற இரண்டாம் நிலை பெஞ்ச் கிளார்க் அவர்களால் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது

**3 வது எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை**

நான் தற்போது சூலூர் வட்டார போக்குவரத்து அலுவகலத்தில் இளநிலை உதவியாளராக பணியாற்றி வருகிறேன். எனக்கு சாட்சியம் அளிக்க வழங்கப்பட்ட நடைமுறை கடிதம் எ.ம.சா.ஆ. 1 ஆகவும், 2 வது எதிர்மனுதாரர் சதாசிவம் அவர்களின் TN 39 R 3592 என்ற வாகனத்திற்கு வழங்கப்பட்ட மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ 2 ஆகவும், மேற்படி TN 39 R 3592 என்ற வாகனத்திற்கான சோதனை அறிக்கை சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ 3 ஆகவும், மேற்படி சோதனையின் படி TN 39 R 3592 என்ற வாகனத்திற்கு உரிய தகுதி சான்று இல்லை என அறிக்கை அளித்ததன் அடிப்படையில் 2 வது எதிர்மனுதாரர் சதாசிவம் செலுத்திய ரூ.7 ஆயிரத்திற்கான அபராத ரசீது சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1. எனக்கு விபத்து தொடர்பான சங்கதிகள் ஆவணங்களின் அடிப்படையில் தான் தெரியும் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு உரிய ஓட்டுனர் உரிமம் நடைமுறையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வாகனத்திற்கு

மூன்றாவது எதிர்மனுதாரிடம் காப்பீடு நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். மனுதாரர் கோரி உள்ள இழப்பீடு வழங்க 1ம் எதிர்மனுதாரரும், மூன்றாம் எதிர்மனுதாரர்கள் கடமைப்பட்டுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரதுகையெழுத்து பெறப்பட்டது.

(Sd/−)K.Yuvaraj,B.A.B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.